සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
**Department of Samurdhi Development**

ග්‍රාමීය සංවර්ධන , සමාජ ආරක්ෂණ සහ ප්‍රජා සවිබල ගැන්වීමේ අමාත්‍යාංශය
கிராமிய அபிவிருத்தி , சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு
Ministry of Rural Development, Social Security and Community Empowerment

| මගේ අංකය<br>எனது இல<br>My No | DSD/HO/14/SS/2/VII/3/2025-2 | ඔබේ අංකය<br>உமது இல<br>Your No | ........................ | දිනය<br>திகதி<br>Date | 2025.07.19 |
|---|---|---|---|---|---|

சமுர்த்தி சுற்றறிக்கை இலக்கம்:-2025/10

சகல மாவட்ட செயலாளர்கள்/மாவட்ட சமுர்த்தி மேலதிக பணிப்பாளர் தலைமை அதிபதிகள்,
சகல மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்கள்,
சகல பிரதேச செயலாளர்கள்,
சகல பிரதி சமுர்த்தி பணிப்பாளர்கள்/உதவி சமுர்த்தி பணிப்பாளர்கள்,
சகல சமுர்த்தி முகாமையாளர்கள்,
சகல விடயப் பொறுப்பு உத்தியோகத்தர்கள்/சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்.

**அஸ்வெசும நன்மைகளின் பொருட்டு உரிமைகள் கிடைக்கப் பெறாத சமுர்த்தி பயனாளி குடும்பங்களின் உயர்கல்வி கற்கும் பிள்ளைகளுக்காக செயற்படுத்தப்படுகின்ற சிப்தொர புலமைப் பரிசில் வேலை திட்டத்திற்குரியதாக தவணைப் பணத்தினை நேரடியாக அனுப்புவதன் மூலம் சமுர்த்தி வங்கிகள் ஊடாக பயனாளிச் சிறார்களின் கணக்குகளில் வரவு வைத்தல்.**

**01. பின்னணியும் நோக்கமும்.**

i. சமூக அபிவிருத்தி நம்பிக்கை பொறுப்புச் சபையின் அங்கீகாரத்திற்கு அமைய சமுர்த்தி நன்மைகள் கிடைத்திருந்த அஸ்வெசும நன்மைகளின் பொருட்டு தெரிவு செய்யப்படாத குடும்பங்களின் உயர்தரத்தில் கல்வி கற்கும் சிறார்களின் பொருட்டு சிப்தொர புலமைப் பரிசு வேலைத் திட்டம் சமுர்த்தி சமூக அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்புச் சபையால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

ii. தற்போது 2023-2025 கல்வி ஆண்டு மற்றும் 2024-2026 கல்வி ஆண்டின் பொருட்டு சிப்தொர புலமைப் பரிசு தவணைப் பணம் செலுத்தப்படுகின்றது. இந்த சிப்தொர புலமை பரிசு தவணைப் பணத்தினை உரிய நேரத்தில் சிறார்களுக்கு வழங்கும் பொருட்டு முறைப்படியான சுற்றறிக்கை ஆலோசனைகள் வழங்கப்பட்டிருந்தும் உரிய நேரத்தில் சரியான தகவல்கள் கிடைக்காத சந்தர்ப்பங்கள் ஒரு சில மாவட்டங்களில் காணக்கூடியதாக உள்ளது.

iii. அதன் பிரகாரம் ஏற்படுகின்ற நிலுவையான தவணைப் பணத்தினை ஒரே தடவையில் செலுத்துதல் தவணை பணத்தை தாமதமாகி செலுத்துதல் மற்றும் பணம் நிலுவையானதன் பின்னர் திரும்ப அனுப்புதல் போன்ற சம்பவங்கள் காரணமாக நிதிப்பாய்ச்சல்களை சரியான பிரகாரம் பராமரித்து செல்வதற்கும் பணத்தை பயனுறுதி வாய்ந்த விதத்தில் முதலிடுவதற்கு மற்றும் சிறார்களுக்கு தவணைப் பணம் உரிய நேரத்தில் கிடைக்காமை காரணமாக இந்த வேலை திட்டத்தின் நோக்கங்கள் நிறைவேறாமல் இருப்பதற்கு தாக்குச் செலுத்துகின்றது.

iv. மேற்படி விடயங்களை கவனத்தில் கொண்டு இந்த வேலைத் திட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளல் மற்றும் சமூக அபிவிருத்தி நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் நடவடிக்கைகளை முறைப்படி நிர்வகித்தல் மற்றும் முகாமைத்துவம் செய்து கொள்ளும் பொருட்டு


1වන අදියර,4 වන මහල , සෙත්සිරිපාය , බත්තරමුල්ල. / 1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல / 1st Step. 4 th floor, Sethsiripaya Battaramulla

| | අධ්‍යක්ෂ ජනරාල්<br>பணிப்பாளர் தலைமையதிபதி<br>Director General | අතිරේක අධ්‍යක්ෂ ජනරාල් (පාලන හා ආයතන)<br>மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதி ( நிர்வாகம்/தாபனம்)<br>Additional Director General (Admin & Establishment) | ප්‍රධාන ගණකාධිකාරී<br>பிரதான கணக்காளர்<br>Chief Accountant | අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය)<br>பணிப்பாளர் (குறு நிதி )<br>Director (Micro Finance) | කාර්යාලය<br>அலுவலகம்<br>Office |
|---|---|---|---|---|---|
| Tel- | 011-2872202 | 011-2873799 | 011-2869742 | 011-2889003 | 0112872202 |
| Fax - | 011-2889002 | 011-2873996 | 011-2869742 | 011-2887469 | |
| E-mail- | dgsamurdhi@gmail.com | diradmin@samurdhi.gov.lk | finance@samurdhi.gov.lk | | |
| | | **Hot Line :0112-889007** | | **Hot Line:0112-885582** | **Hot Line: 011- 2887722** |

மாவட்டங்களில் இருந்து சமுர்த்தி வங்கி மட்டத்தில் தகவல்களை வரவழைத்துக் கொண்டு நேரடியாக சமுர்த்தி வங்கிகளுக்கு உரிய தவளணப் பணத்தினை அனுப்பி பயனாளிச் சிறார்களின் கணக்குகளுக்கு குறிப்பிட்ட நேரத்தில் வரவு வைப்பதற்கு நம்பிக்கை பொறுப்புச் சபை ஆலோசனைகளை வழங்கியுள்ளது.

02. **நேரடியாக பணம் அனுப்பும் முறையினை நடைமுறைப்படுத்துதல்.**

i. தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்ற இரு கல்வி ஆண்டுகளுக்கும் உரியதாக இதுவரையில் செயற்படுத்தப்பட்ட பிரகாரம் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரால் உறுதிப்படுத்திக் கொள்ளப்படுகின்ற புலமைப் பரிசு பெறுவோரின் தகவல்களை பிரதேச செயலகத்திற்கு வழங்க வேண்டியதுடன் பயனாளி சிறார்களின் பெயர் கணக்கிலக்கம் உள்ளடங்கிய தகவல்களை குறித்த வங்கி வலயத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

ii. பிரதேச செயலகத்திற்கு வலய மட்டத்திலிருந்து கிடைக்கப் பெறுகின்ற தகவல்களை முறையான அங்கீகாரத்தின் கீழ் மாவட்ட செயலகங்களுக்கு சமர்ப்பித்தல் வேண்டும். பிரதேச செயலக தொடர் முறை மற்றும் சமுர்த்தி வங்கி தொடர்முறைகளுக்கேற்ப மாவட்ட செயலகங்களுக்கு மின்னஞ்சல் ஊடாக இதனோடு சமர்ப்பிக்கப்பட்டுள்ள படிவத்தில் (Excel File) உரிய தகவல்களை பதிவேற்றி ssfsamurdhi@yahoo.com மின்னஞ்சல் ஊடாக தலைமை அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அதன் அச்சுப் பிரதியை மாவட்ட சமுர்த்தி பணிப்பாளரின் கையொப்பத்துடன் தலைமை காரியாலயத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

iii. மேலும் சிப்தொர புலமை பரிசு தவணை பணத்தைக் கோரும் போது இதுவரையில் தலைமை அலுவலகத்திற்கு சமர்ப்பித்த பொழிப்பறிக்கையை(இணைப்பு-02) கல்வி ஆண்டிற்கேற்ப தனித்தனியாக மாவட்ட சமுர்த்தி பணிப்பாளரின் அங்கீகாரத்தோடு சமர்ப்பித்தல் வேண்டும்.

iv. மாவட்டங்களில் இருந்து சமுர்த்தி வங்கி மட்டத்தில் தலைமை அலுவலகத்திற்கு கிடைக்கப்பெறுகின்ற தகவல்களை அடிப்படையாகக் கொண்டு சிப்தொர புலமை பரிசு தவணைப் பணம் உரிய சமுர்த்தி வங்கி நடைமுறைக் கணக்கில் வரவு வைக்கப்படும்.

v. அதன் பிரகாரம் குறித்த சமுர்த்தி வங்கியானது சிப்தொர புலமை பரிசிற்குரிய பயனாளிச் சிறார்களின் கணக்கிற்கு தவணைப் பணம் வரவிலிடப்படும்.

vi. பயனாளி சிறுவரின் கணக்கில் தவணைப்பணம் வரவு வைக்கப்பட்டவுடன் பயனாளியின் கையடக்க தொலைபேசிக்கு குறுந்தகவல் ஒன்றின் மூலம் அது பற்றி அறிவிக்கப்படும். ஆகையினால் இது தொடர்பில் பயனாளியை விளக்கமளித்து பயனாளியின் தொலைபேசி இலக்கத்தினை குறித்த சமுர்த்தி வங்கியின் மூலம் அல்லது பிரிவின் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் மூலம் தரவுத் தொகுதியில் பதிவேற்றம் செய்தல் வேண்டும்.

vii. 2025 - 2027 புதிய கல்வி ஆண்டின் உயர்தர வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் சிப்தொர புலமை பரிசில் வேலை திட்டத்தின் பொருட்டு புதிய மாணவர்களை இணைத்துக் கொள்வதற்குரிய சுற்றறிக்கைகள் விரைவாக தங்களுக்கு சமர்ப்பிப்பதற்கு உத்தேசித்துள்ளதுடன் அம் மாணவர்களின் தகவல்களையும் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பும் போது இச்சுற்றறிக்கை ஆலோசனைகளை பின்பற்றுதல் வேண்டும்.

03. ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் சொந்தமான சமுர்த்தி வங்கிகளின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு முன்வரும் 5 மாதங்களுக்கு தேவையான எழுதி கருவிகளை கொள்வனவு செய்வதற்காக முற்பணத் தொகை ஒன்றையும் விரைவில் தங்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.

04. இந்த சிப்தொர புலமைப் பரிசில் தவணைப் பணங்களை செலுத்துவதற்குரிய கணக்கீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பில் முறைப்படியான ஆலோசனைகள் தலைமை அலுவலகத்தின் குறுநிதிப் பிரிவினால் சமுர்த்தி வங்கிகளுக்கு எதிர் வரும் நாட்களில் வழங்கப்படும்.

05. மேற்படி முறைக்கு ஏற்ப சிப்தொர புலமைப் பரிசு தவணைப் பணத்தினை செலுத்துவது 2025 செப்டம்பர் மாதத்தில் இருந்து அமுல்படுத்த கீழுள்ள கால வரையறைக்குள் மேற்கொள்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

| | A | B |
|---|---|---|
| i. | பிரிவு பொறுப்பு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரால் தற்போது செயற்படுத்தி வரும்(2023-2025 /2024-2026) ஆண்டுகளுக்குரியதான சிப்தொர புலமைப் பரிசிலைப் பெறுவோரின் தகவல்களை பிரதேச செயலகத்திற்கும் குறித்த சமுர்த்தி வங்கிச் சங்கத்திற்கும் சமர்ப்பித்தல் | முன்னைய மாதத்தின் நான்காவது வாரம் முடிவடைய முன்னர் |
| ii. | பிரதேச செயலகத்தால் பிரிவு மட்டத்தில் பெற்றுக் கொண்ட தகவல்களை சமுர்த்தி வங்கி மட்டத்தில் தயாரித்து பிரதேச செயலாளரின் அங்கீகாரத்துடன் மாவட்ட செயலகங்களுக்கு சமர்ப்பித்தல். | ஒவ்வொரு மாதமும் முதலாம் வாரத்திற்குள் |
| iii. | மாவட்டத்திற்கு சமுர்த்தி வங்கி மட்டத்தில் வழங்கப்படுகின்ற தகவல்களை தலைமை காரியாலயம் வழங்கிய Excel sheet ஐப் பயன்படுத்தி பதிவேற்றுவதும் மென் பிரதியை தலைமை அலுவலகத்திற்கு மின்னஞ்சலூடாக சமர்ப்பித்தல். அச்சுப்பிரதியை மாவட்ட சமுர்த்தி பணிப்பாளரின் அங்கீகாரத்துடன் தலைமை அலுவலகத்திற்கு சமர்ப்பித்தல். | ஒவ்வொரு மாதமும் இரண்டாம் வாரத்திற்குள் |
| iv. | தலைமை அலுவலகத்திற்கு கிடைக்கப்பெறுகின்ற தரவுகள் உள்ளடங்கிய Excel sheet ஐ அடிப்படையாகக் கொண்டு சமுர்த்தி வங்கிகளுக்கு நிதியினை அனுப்புதல் மற்றும் சமுர்த்தி வங்கிகளால் பயனாளி சிறார்களின் கணக்குகளில் தவணைப் பணத்தினை வரவு வைத்தல். | ஒவ்வொரு மாதமும் மூன்றாம் வாரத்திற்குள். |

06. சமுர்த்தி சமூக அபிவிருத்தி நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்புத் தொகை கிடைக்கப்பெறாத நிலைக்கு மத்தியிலும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் சிறார்களது கல்வி நிலை சீர் குலைவதற்கு இடமளிக்காது இரண்டாம் நிலைக் கல்வியில் பிரவேசிக்கும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்படுகின்ற இந்த சிப்தொர புலமை பரிசு வேலைத் திட்டத்தினை வெற்றிகரமாக்கிக் கொள்ளும் பொருட்டு தாங்கள் வழங்கும் ஒத்துழைப்புக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

சீ.டீ.களுஆரச்சி
பணிப்பாளர் தலைமை அதிபதி

பிரதிகள்

1. செயலாளர் கிராமிய அபிவிருத்தி சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு - த.கூ.க.பொருட்டு
2. பணிப்பாளர்(குறுநிதி) சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - உ.ந.பொருட்டு
3. உதவி பணிப்பாளர்(தகவல் தொழில்நுட்பம்) சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - உ.ந.பொருட்டு
4. பிரதான உள்ளக கணக்காய்வாளர் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் -உ.ந.பொருட்டும்/ அகொ.பொருட்டும்

TRANSLATED BY – M.M.M. JAWHAR (Translator)

**சமுர்த்தி சிப்தொர புலமைப் பரிசு வேலைத்திட்டம் - மாவட்ட அறிக்கை**

**.................................. கல்வி ஆண்டு**

**.......................................... மாதம்**

**மாவட்டம்:-**

| தொடர் இலக்கம் | பிரதேச செயலகப் பிரிவு | புலமைப்பரிசு பெறுவோரின் எண்ணிக்கை | பெண் பிள்ளைகளின் எண்ணிக்கை | ஆண் பிள்ளைகளின் எண்ணிக்கை | விடயத் துறைக்கேற்ப | | | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | கலை | வணிகம் | விஞ்ஞானம் | கணிதம் | தொழில்நுட்பம் | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| **மொத்தம்** | | | | | | | | | | |

தயாரித்தவர்:-

பரீட்சித்தவர்:-

.........................................................

அங்கீகாரம் (மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர்)